# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)
*******

ஆணை எண்.002/பே/2021

ஆணை நாள். 03.03.2021

திரு. மு. அரவிந்தராஜ்,
திருப்பூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
சாமளாபுரம் பேரூராட்சி. – எதிர் மனுதாரர்.

திருப்பூர் மாவட்டம், 2–சி. அன்னூர் சாலை, பெரியகாடு, கருகம்பாளையம், இச்சிப்பட்டி அஞ்சல், சோமனுழர் என்ற முகவரியில் வசிக்கும் திரு மு. அரவிந்தராஜ் அவர்களின் 10.08.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 002/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியியிப்படுகிறது.

## ஆணை.

திருப்பூர் மாவ.டம், 2–சி அன்னூர் சாலை, பெரியகாடு, கருகம்பாளையம், இச்சிப்பட்டி அஞ்சல், சோமனூர் என்ற முகவரியில் வசிக்கும் திரு மு.அரவிந்தராஜ் என்பவர் கீழ்க்கண்டவைகளை தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். சாமளாபுரம் கிராமத்தில் புல எண். 847 இட்டேரியாகவும் மழைக்காலங்களில் ராஜ வாய்க்காலுக்கு வெள்ள நீரை கொண்டு செல்லும் வடிகாலாகவும் இருந்து வந்தது. அதை மூடி சுமார் 5 அடிக்கு மேல் மண் கொட்டி

மேடாக்கி புல எண். 845–ல் அமைக்கப்பட்ட மனைபிரிவு (dtcp no. 270/2013 )க்கு பாதையாக மாற்றப்பட்டது. முத்துவேல்ராஜா என்பவர் தனது வீட்டிற்கு பாதை அமைப்பதற்காக சுமார் 10 அடி 847–ல் ஆக்கிரமித்து கொண்டு சாய்வுதள பாதை அமைத்து கொண்டுள்ளார். இதன் காரணமாக அருகில் குடியிருக்கும் வாசிகள் எனது இடத்திற்குள் வாகனங்களை ஒட்டி வந்தனர். இந்நிலையில் எனது இடத்தை எல்லை காமித்து உட்பிரிவு செய்துகொள்ள மனு அளித்திருந்தேன். நில அளவை 16.06.2020 அன்று வட்டாட்சியர் துனை, காவல் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் ஆகியோர் வந்து எல்லை கல் நட்டு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் சாமளாபுரம் பேரூராட்சி அலுவலர் பொது சாலையை ஆக்கிரமித்த நபர்கள் மீதோ அல்லது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்தை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. பொது சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்ட வீடுகள் என தெரிந்தும் கட்டிட அனுமதி வழங்கியுள்ளார். ஏனவே பொது சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கட்டுமானங்களை அகற்றி தருவதுடன், மேல்நிலைத்தொட்டி கட்டாமல் அங்கீகாரம் அளிக்கப்பட்ட மனைபிரிவு உரிமையை ரத்து செய்யவும் அல்லது மேல்நிலைத்தொட்டி கட்டி வழங்குவதுடன் முழுமையாக 845–ல் கட்டப்பட்டுள்ள அனைத்து கட்டுமானங்களையும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க உத்தரவிட இம்முறை மன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2) திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மனுதாரர் ஆகியோர்களிடம் 24.02.2021 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தமது வாக்குமூலத்தில் கருகம்பாளையத்தில் அரசுக்குச் சொந்தமான வண்டிப்பாதையில் சரிதா கார்டன் உரிமையாளர், மண் சாலையாக இருந்ததை தார் சாலையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு பேரூராட்சி மூலம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் அப்பகுதியில் கட்டுமான விதிகளுக்கு மாறாக கட்டிடம் கட்டியுள்ளனர். சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் முன்னிலையிலும் எல்லை கல் நட்டு கொடுக்கப்பட்டது. அதன் பின்னும் ஆக்கிரமிப்புக்களை அகற்றவில்லை. எனவே 201–வது பிரிவின் கீழ் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடங்களை அகற்றவில்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்க கோருகிறேன். ஆக்கிரமிப்பு கட்டிடங்களை அகற்றிட உத்தரவிடவும் கோருகிறேன்.

மேலும் என்னுடைய புகார் மனுவில் உள்ளதையே எனது நேரடி வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

3) சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் தமது வாக்குமூலத்தில் மனுதாரரின் புகார்கள் குறித்து வருவாய் துறையுடன் கலந்து ஆலோசித்தும், புல தணிக்கை மேற்கொண்டும், கிராம வரைபடம், 'அ' பதிவேடு மற்றும் தொடர்புடைய வருவாய் துறை ஆவணங்களை ஒப்பிட்டு, விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் என உறுதி கூறுகிறேன். மேலும் மேற்கண்ட புகார் தொடர்பாக என்னுடைய 24.02.2021 நாளிட்ட நீண்ட விளக்கத்தையும், எனது வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

4)மேலும் சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலவலர் தமது 24.02.2021 நாளிட்ட அறிக்கையில் மனுதாரர் கருகம்பாளையம் பகுதி க.செ.எண். 847–ல் பொது சாலையினை ஆக்கிரமிப்பு செய்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியதின் பேரில் கருகம்பாளையம் வார்டு எண். க.ச.எண்.845/3–ல் 14 லட்சுமி கார்டன் மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள், கட்டிட விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்டுள்ள லட்சுமி கார்டன் பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புதாரர்களுக்கும் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை அகற்றிக்கொள்ள தெரிவித்து அனைவருக்கும் அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கருகம்பாளையம் பகுதியில் க.ச. எண். 845/3–ல் அமைந்துள்ள மனைப்பிரிவு சரிதா கார்டன் கோவை உள்ளூர் திட்டக்குழும அலவலகம் மூலம் ஒப்புதல் பெறப்பட்ட மனைப்பிரிவு ஆகும். மேற்படி மனைப்பிரிவு அங்கீகாரம் அளித்த நிபந்தனைகளில் மேல்நிலைத்தொட்டி கட்டப்பட வேண்டும் என எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் மேற்படி மனைப்பிரிவிக்கு, அடிப்படை வசதிகள் மேற்கொள்ள தேவையான தொகை கணக்கீடு செய்து மனைப்பிரிவு உரிமையாளரிடம் வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அங்கு வசித்து வரும் 26 குடியிருப்புதாரர்களுக்கும் பேரூராட்சி மூலம் வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டு, சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. குடியிருப்புதாரர்கள் தொடர்புடைய இடத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டித்தருமாறு கோரிக்கை வைத்தால், மக்கள் தொகைக்கு ஏற்ப பிற்காலத்தில் பேரூராட்சி மூலம் மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

5)மேற்படி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்கு மூலம், மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டதில் புகார் மனுதாரரின் புகார்கள் குறித்து வருவாய் துறையுடன் ஆலோசித்து, புல தணிக்கை மேற்கொண்டு தொடர்புடைய வருவாய் துறை ஆவணங்களை ஒப்பிட்டு விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் ஆக்கிரமிப்புக்களை சட்ட விதிகளுக்குட்பட்டு அகற்றிட தேவையான நடவடிக்கைகளை எடுக்க சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு மார்ச்சு, திங்கள், 3 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

04.3.21

4/3/21

பெறுநர்

1) திரு. மு. அரவிந்தராஜ்,
 2–சி, அன்னூர் சாலை, பெரியகாடு,
 கருகம்பாளையம், இச்சிப்பட்டி அஞ்சல்.
 சோமனூர் – 641 663.
 திருப்பூர் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
 சாமளாபுரம் பேரூராட்சி,
 பள்ளப்பாளையம் – 641 663.
 திருப்பூர் மாவட்டம்.

நகல். முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்

இகோ/உதிரிகள்.